22.3246

# ஆத்மபோதினி

௧

JL
m211, N17xB
N31.5.5
223246

JL
ஸ்ர211, N17 VB

ஆத்மா போதினி.

மலர் 5 ஆகஸ்ட் 1921.

Pages.

JL
ஸ்ர211, N17VB.
N31.5.5
223 246.

ஓம்.

கடவுள் துணை.

# வித்யா போதினி.

" எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும் "—" நாயனர்."

(பிரசுர உரிமை பிறர்க்கிலது)

மலர் ௨ | துன்மதி ஸ்ரீ புரட்டாசிமீ ௩௨ / 1921-ஸ்ரீ செப்டம்பர் மீ 16௨ | இதழ் ௨

## இறை இயல் உரை.

### கணபதி

எண்ணிய எண்ணியாங் கெய்துப கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல் பணிவோரே.

### சரஸ்வதி

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தின் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

### கடவுள்

உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

### தமிழ்

கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந் தாய்ந்த இப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா எண்ணவும் படுமோ.

23246

ஓம்

# வித்யாபோதினி

துன்மதி ௵ புரட்டாசி ௴ ௧௨

## சென்னை மாகாணமும் ஆரம்பக்கல்வியும்.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் வாய்மொழிப் படி கற்கத்தக்கனவாகிய தர்க்கம் கணிதம் முதலிய நூல்களையும், இலக்கிய இலக்கண நூல்களையும் ஐயந்திரிபறக்கற்றுக்கொண்டவர், ஞானக்கண்ணாகிய அகக்கண்ணையும் பெற்றவராதலால் அவர்கள் முகத்தில் விளங்கும் கண்களே உண்மையிற் கண்களாமென்றும், ஏற்பனவற்றைக் கற்காது புறக்கண் இரண்டுடன் விளங்குவார் முகத்தில் விளங்கும் கண்கள் நன்மையிது தீமையிது என்று பகுத்துணரும் நுட்பத்தை முற்றிலும் பெற்றிலாமையால், அவை புண்களாகவே மதிக்கப்படுமென்றும் சொல்லப்படும். இதனால் மக்கள் யாவரும் நூல்களைக் கற்றுணர்வுடையவர்களாகவேண்டும் என்பதும், நூல்களைக்கற்றறிதற்குத்தக்கவாறே அறிவு மேம்படுமென்பதும் பெறப்படும். ஆக இயற்கை அறிவை நூல்களைக் கற்றல் கேட்டல் ஆகிய செயற்கையால் வளர்ப்பதே கல்வியெனப்படும். இதுவே அழியாத மெய்ப்பொருளாம். செல்வப்பொருள் போன்று நீராலும் நெருப்பாலும் கள்வராலும் பகைவராலும் கவர்ந்து கொள்ளப்படாதது. சிற்றுயிர்க்குற்றதுணையான இக்கல்வியானது கற்றுக்கொண்ட ஒருவனுக்கு எழு பிறப்புக்கும் உதவக்கூடியது. மக்கள் தேடவேண்டிய அறம், பொருள் இன்பம், வீடு ஆகிய நான்கு பொருளையும் தருவதும், கற்றவற்றின்படி நடக்கின்றவனுக்குப் [illegible] கல்வியே.

## "வித்யாபோதினி அநுபந்தம்."



ரபீந்திரநாத தாகூர்.

இத்தகைய கல்வி மக்களுக்கு இன்றியமையா... "மாவும் மாக்களும் ஐயறிவினவே, மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்ற தொல்காப்பியர் சூத்திரத்தாலும், "விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல், கற்றாரோடு ஏனையவர்" என்ற வள்ளுவனார் வாய்மொழியானும் வலியுறுத்தப்படுவதாம். இப்பெரியார்களின் சொற்பொருளையாராயின், நன்மையிது தீமையிதுவென்று பகுத்துணரக்கூடிய மன அறிவாகிய ஆறாவதறிவைப் பெற்றவர்களே மக்களாவார்களென்றும், பகுத்தறிவில்லாது மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐந்து பொறிகளின் உணர்ச்சியாகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசையாகிய ஐவகையறிவையும் படைத்தவர்கள் வடிவத்தால் மானிடரேயாயினும், பகுத்தறிவைப் பெறாத குறையால் அவ்வைவகையறிவையே பெற்றிருக்கும் மிருகத்தை யொத்தவர்களாதலின் அவ்வினத்துக்கு வழங்கப்பெறும் மாக்கள் என்னும் பெயரையே பெறத்தகுதியுடையவராவரென்றும் விளங்குகின்றன. ஆதலின், "அரிதரிது மானிடராய்ப்பிறத்தல் அரிது, மானிடராகப் பிறந்த காலையும், கூன் குருடு செவிடு பேடு நீங்கிப்பிறத்தல் அரிது; பேடு நீங்கிப் பிறந்தகாலையும் ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிது" என்ற நீதிவாக்கியத்துக்கிணங்கப் பிறத்தற்கரிய மானிடப்பிறவியை யடைந்தவர்கள் அருமையான கல்வியையும் ஞானத்தையும் அடைய முயற்சி செய்தல் அவசியமென்பது பெறப்படுகின்றது.

எந்த நாடு கல்வியறிவுடைய மக்களை யதிகமாகப் பெற்றிருக்கின்றதோ, அந்த நாடே நாகரிகத்திலும் உழவு கைத்தொழில் வாணிபம் முதலியவற்றிலும் தலைசிறந்து நிற்பதாம். இவ்வுண்மை, இற்றைக்குச் சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்னர் கல்வியைப் பரவச்செய்து, நாட்டின் கைத்தொழில் முதலியவற்றை வளர்த்து, உலகத்தின் நாலாபக்கத்துக்கும் தன்னுடைய தொழிற் பொருள்களை யனுப்பிச் சிறந்துவருகின்ற ஜப்பான் தேசத்தாலே விளங்குமாகும். இந்தியநாடு உலகத்திலுள்ள பழமையான நாகரிக நாடுகளாகிய கிரீஸ் எகிப்து முதலிய நாடுகளுக்கும் நாகரிகத்தைப் புகட்டக்கூடிய தன்மையில் விளங்கியதென்று சரித்திர நூல்கள் சொல்லு

பூர்வீகக் கவனிக்கின் நம் நாட்டிற் கல்வி கற்றவர் முக்காலத்திலிருந்திருக்கின்றார்களென்பது வெளிப்படை. ஆனால் அக்காலத்தவர் கற்றுவந்த கல்வி முறைமைக்கும் இக்காலம் பிரிட்டிஷ் அரசாங்க ஆட்சி முறையில் ஏற்பட்டிருக்கும் கல்வி முறைமைக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. அக்காலத்தில், கல்வி கற்கும் பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு எழுத்துப் பயிற்சி தாய்மொழியிலேயே இலக்கண முறை வழுவாது செய்யப்படுவதாயிற்று. இக்காலமோ இலக்கணமுறை தவறிய வகையில் அச்சுப் புஸ்தகங்கள் மூலமாக ஆரம்பக்கல்வி கொடுக்கப்பட்டு வருவதாகிறது. அக்காலத்து ஆரம்பக்கல்வியாசிரியர்கள் தம் தாய்மொழியிற் காணப்படும் இலக்கிய இலக்கண நூல்களிலும் தர்க்கம் கணிதம் முதலிய சாஸ்திரங்களிலும் தக்கவாறு தேர்ச்சி பெற்றவர்களாய்த் தாம் இருக்கும் கிராமத்திலுள்ள பலரும் தம்மையே உறுதுணையாகக் கொண்டு வாழும்படி செய்யத்தக்க கணக்காயராகவும் விளங்கினர். இக்காலத்தோ, தாய்மொழியில் எழுதவும் படிக்கவும், 5-வது 6-வது வகுப்பு மாணவர் அறிந்திருக்கக்கூடிய கணக்கு வகைகளைச் செய்யவும் திறமை வாய்ந்தவரே பிரதமப்பள்ளியாசிரியர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்களுக்குத் தாய்மொழியிற் குறைந்த தேர்ச்சியும், அரசமொழியாகிய ஆங்கிலத்தில் சொற்ப வாசனையுமே இருப்பதுபற்றி, கிராமத்தார்கள் இவர்களைப் பெரும்பான்மையும் மதிப்பதில்லை. தாய்மொழியிலாவது அரசமொழியிலாவது குறையாத தேர்ச்சி வாய்ந்தவர்கள் ஆரம்பப்பள்ளிக்கூட ஆசிரியர்களாக விளங்குவார்களாயின், இவர்கள் யாவராலும் நன்கு மதிக்கப்பெறுகிறார்கள். இதனால், ஆரம்பப்பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாய் அமர்பவர்கள் அரசமொழியில் சம்பாஷிக்கத் தக்க அறிவும், தாய்மொழியில் செய்யுள் நூல்களை அர்த்தம் பண்ணக்கூடிய அறிவும் பெற்றவர்களாயிருக்கவேண்டுமென்பது அவசியமாகிறது. ஏனெனில், நடுத்தரப்படிப்பு, உயர்தரப்படிப்பு ஆகிய மற்றிருவகைப்படிப்புக்கும் அடிப்படையாக இருப்பது ஆரம்பக் கல்வியாம். இவ்வாரம்பப்படிப்பு தக்கவரால் முறையுடன் கற்பிக்



நாரணன் திருமால்தேட அடி முடி ஒளிந்த ஞானப்
பூரண வெளியாய் மேல்கீழ் உலகெலாம் பொருந்திநிற்போம்
தாரணியவர்க்கு மற்றைச் சயிலமாய் இருப்போம் அங்கே
வாரணி முலையாய்! பாகம் தருதுமோம் வருதி என்றார்

௧௭ என்னலும் இறைவி சொல்வாள் இனிமைசேர் கயிலை காசி
அன்னிறம் இனிது காஞ்சித் தலமென உரைத்தீர் இந்த
கன்னிலம் தனக்குச் சோணசைலமே அதிகமென்றீர்
பின்னையும் உளதோ அந்தத் தலத்திலுக்கு இணையாம் பேறு

௧௮ அவ்வுரை மனத்தெங் கோமான் அருளுவான் நமக்கொப்பான
தெய்வம்இங் கெழுந்து மானத் திருந்துமக் கிரமுமில்லை
சைவமே அனையதான சமயமும் அருணை போல
வெவ்வினை தவிர்க்கும் ஊரும் இலையென விளம்பிப் போனான்.

௧௯ மாலையெனும் குமரியிருள் மகிடமுகம் அகற்றியந்தி வானிற் கோறிக்
கோலமுடன் படிகலிங்கம் கொண்டதுபோல் மதியெழுந்து குடபாற் [சென்ற
காலமணி மிடற்றிறைவன் விழிபுதைக்க விளைந்தவிருள் அனைத்தும் [நீங்கப்
பாலமிசை வெடித்தெழுந்த விழியெனவே எழுந்ததுசெம் பரிதிதானே

௨௰ வென்றியினூற் கவர்ந்தபொருள் பகிர்ந்திறைவி பலிபாடும் வேனிற்பாலைக்
குன்றமெலாம் வெறியாடல் முல்லையெலாம் பொதுவர் மின்னார் குர [வையாடல்
மன்றல்கமழ் இந்திரற்கு விழாவெடுத்துக் கொண்டாடல் மருதவேலி
முன்றிலெலாம் சினைச்சுறவ முன்றுணங்கி அணங்காடு முன்னீர்க்கானல்
"நாதன்"

## கணக்காராய்ச்சிவிடை.

நிலத்தின் நீளம் கால்மைல் அல்லது 440 கெஜம் அல்லது 1320 அடி

அளக்கும் நாடாவின் இயற்கை நீளம் 10 கெஜம் அல்லது 30 அடி. இந்தச் சரியான நாடாவைக் கொண்டு அளந்தால் 1320 அடிகளையும் 44 தடவைகளில் அளந்திருப்பான்.

ஆனால் நாடா நெகிழ்ந்து விட்டதால் ஏற்பட்ட அதிக நீளம் கால் அடி.

இவ்வளவு நீண்ட கோட்டால் அளக்கும் பொழுது 43 தடவைகள் சரியாகவும் 44 வது முறை குறைவாகவும் அளக்க நேரும்.

அவ்வளவும் குறைவு படும் அளவு கோட்டை நெகிழ்ச்சியால் ஏற்பட்டது.

இதனால் 43 × ¼ அடி அல்லது 10¾ அடி, 44 வது தடவை அளக்கும் பொழுது நிலத்தில் குறைவுண்டாயிருப்பதாகக் காணப்படும்.

ஆகவே இந்த நெகிழ்ந்த கோட்டால் நிலக்காரன் அளந்திருக்கக் கூடிய அளவு:—

43 × 30 அடி ÷ (30 − 10¾) அடி.

அதாவது 1290 + 19¼ அடி.

அதாவது 1309¼ அடி அல்லது 436 கெஜம் 1 அடி 3 அங்குலம் நீளமே அவன் நிலத்தின் உண்மை அளவாக அளந்திருப்பான்.

'கூடலழகன்.'

---

## வித்தியாபோதினி மங்கள வாழ்த்து

நந்துவமெலாஞ் சகத்தினிலுரைத்திடும்
வித்தியா போதினி மேதினி விளங்குக
முத்தியை விரும்பிடு முதறிவாளரும்
நித்திய மங்களம் நிலத்தினி லெய்துக
இங்கித மித்திரர் இறைவனையெய்துக.
மங்கள மனைதனில் வந்துமே வளர்க
சங்க நற்சபைகளுந் தழைத்துமே பெருகுக
எங்கணும் இந்தியர் இசையுடன் வாழ்கவே.

V. வைத்தியநாதசுவாமி,
திருவள்ளுவர் கல்விக்கழக மெம்பர்,
திருவாரூர்.

## துளசி அல்லது பிருந்தை

அன்று முதல் பிருந்தையைக்கவனிக்காமலும், வார்த்தையாடாமலும், சதா வெறுப்புள்ளவனானான். பிருந்தை கவலைகொண்டு தனது குருவாகிய தூர்வாஸ மகாமுனியையண்டி "சுவாமி, எனது பிராணநாதன் என்மேல் நிராக்கோபம் கொண்டிருக்கிறார். கற்புள்ள மங்கையர்க்குக் கணவன் பணியைச்செய்வதிலும் வேறு பெருமை என்னவிருக்கிறது. என்னுடைய பணிகளையோ அவர் ஏற்றுக் கொள்ளாதவராகவிருக்கிறார். இதற்கென் செய்வேன்" என்று முறையிட்டாள்.

அதற்கு தூர்வாஸர் சொல்லுவார் "பிருந்தா, பிராரத்வ வினையை யாரால் வெல்லக்கூடும்; பொறுத்திரு. சிறிது காலஞ்சென்று உன் நாயகனுடன் நீ சுகித்திருப்பாய். அதுவரை நீ அவருக்குத்தான் செய்யும் துஷ்டத்தனத்தால் யாதொரு கேடும் வந்துசேராதபடி இடைப்பட்டு நீ காக்கும்படியாக அநுக்கிரகித்தோம்." முனிவரிடம் வரத்தைப்பெற்றுக்கொண்டு, தன் கணவனுக்கு ஏதும் வந்துவிடுமோவென்று இடைவிடாது காத்திருந்தாள். கணவன் தன்னை ஒரு பொருட்டாக நினைக்காவிட்டாலும் "கண்டாரிகழ்வனவே காதலன்றான் செய்திடினும் கொண்டானையல்லால் அறியாக்குலமகள்" ஆதலால், கணவன் பணிசெய்வதே தனக்குற்ற பணியென்று அதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தாள்.

ஜலந்தரன் பிருந்தையை வெறுத்தநாள்முதல் தலைமுடிக்குத் தனமாய், துஷ்ட செயல்களைச்செய்ய ஆரம்பித்தான். தன்னாட்களையும் அவ்வாறு செய்வதில் ஆதரிக்கலானான். கபடமற்ற ஜனங்களைக் காராக்கிருகத்திலடைப்பதும், பெண்களைப்பார்த்து அவமரியாதையாகப்பேசுவதுமான அதிக்கிரமித்த செயலிலேயே ஆழ்ந்துவிட்டான். ஒருநாள் இவனுடைய ஆட்கள் குலப்பெண்மணிகள் சிலரைப்பிடித்து ஜலந்தரனிடம் கொண்டுவரும்பொழுது பிருந்தை எதிர்ப்பட்டு அவர்களையெல்லாம் விடுவித்தாள். இவ்வாறு விடுவித்ததையறிந்துகோபங்கொண்டு ஜலந்தரன் அந்தப்பெண்களினுடைய விடுதலை நெருப்புக்கிரையாக்கத் தன் ஆட்களுக்கு உத்திரவுகொடுத்

இன்னும் அமையாது இந்திரனுடைய நந்தவனத்தருகு படை திரட்டிக்கொண்டுபோனான். அங்கு தன்னெதிர்ப்பட்டதெய்வமங்கையரைச்சிறைபிடித்ததுமல்லாமல், காமதேனுவையும் அபகரித்துக்கொண்டு வந்துவிட்டான். இதனால் இந்திரனுக்குக் கோபம் வந்து இவனை எப்படியாவது வெல்லவேண்டுமென்று உபாயந்தேடினான். ஆனால் பிருந்தையினுடைய கற்பும் பதிபக்தியுந்தான் இவனை வெல்லுவதற்குச்சாத்தியமாகாதிருக்கிறது என்பதைத்தெரிந்துகொண்டான். பெண்மணிகளே நீங்கள் இதில் கவனிக்கவேண்டிய விஷயம் இந்த ஒன்றும், உங்களுடைய பதிபக்தியும் கற்புநிலைமையும் எவ்வளவுக்கெவ்வளவு மேன்மையடைந்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நீங்கள் உங்கள் கணவர்களுக்குத் துணையாய் நின்று வந்த விபத்துக்களையெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கச்செய்யும் சக்திபெற்றவர்களாவீர்கள். இந்தப்பிருந்தைதான் நீங்கள் அனுஷ்டித்துவரும் துளசி நோன்பிற்கு அதிகாரி. இவளைத்தான் நீங்கள் பூஜிக்கிறீர்கள். இவளைப்போலவே நீங்களும் பக்தியுடன் இருக்கவேண்டுமென்றே இந்த விரதம் நீங்கள் அனுஷ்டிக்கப்பெரியோர்கள் வகுத்திருக்கிறார்கள். நோன்பு அனுஷ்டிப்பது வீண் பெருமைக்காகவல்ல. காரணத்தை உணர்ந்துகொண்டு நடந்திடு முறை தெரிந்து நடப்பதற்காகவேயாதலால் நமது நாட்டுப்பெண்மணிகள் இதனைக்கருணையுடன் ஏற்றுக்கொள்வார்களென்றே நம்புகிறோம்.

இனி நாம் சொல்லவந்தது பிருந்தையைப்பற்றியல்லவே. இவளுடைய கணவன் பரமதுஷ்டனாகவிருந்தும், இந்திராதி தேவர்களாலும் இவனை வெல்வது சாத்தியமற்றுப்போனதற்குக்காரணம் பிருந்தையின் பதிபக்தியும் கற்பின் வலிமையுமே. இந்திரன் இவ்வுண்மையை உணர்ந்துகொண்டு எப்படியாவது சூழ்ச்சிசெய்து வெல்லவேண்டுமென்று நினைத்தான். பிருந்தையைக் கற்புநிலைமையினின்று குன்றிடச்செய்தால் ஒருவேளை சாத்தியமென்று இவளிருக்கும் மாடத்திற்குள் சென்றான். ஆனால் இந்திரன் சூழ்ச்சியைக்கற்புள்ள மங்கையர் அறியாதிருப்பரோ? எனவே பிருந்தை அவனைச்சபிக்க ஆரம்பித்தாள். இந்திரனும் தலைதப்பியது தம்பிரான் புண்ணியமென்று ஓடிவிட்டான்.

வரும். டி. ஆர். பத்மநாபன்.



உ

கடவுள் துணை

## கேள்விமுயல்.

இது, நமது ஞானத்தாயாகிய ஸ்ரீ ஔவைப்பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளியது "நீ பெரியோர்கள் சொல்லும் ஞான நூல்களைக்கேட்க முயற்சி செய்" என்பது இதன் கருத்தாகும். சாதாரணமாக நாமெல்லோரும் ஒவ்வொரு விஷயத்தையுந் தெரிந்துகொள்ளவேண்டுவது இன்றியமையாததாக இருக்கிறது. ஒவ்வொன்றையுந் தெரிந்துகொள்வதற்கு நாம் அனுபவத்திலும் அறிவிலுஞ் சிறந்த பெரியோர்களைத்துணையாகக்கொள்கிறோம். பெரியோர்கள் மூலம் நாம் தெரிந்துகொள்வது சில, கற்றுக்கொள்வது சில, கேட்டுக்கொள்வது சில. கற்றோர்கள் கற்றுக்கொள்ளலாம் கல்லாதவர்கள் பெரியோர்கள் வாய்க்கேட்டுத்தெரிந்து கொள்ளலாம். கற்றோர்கள் நூற்களைக்கற்று அவைகளிலுள்ள விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். கல்லாதவர்கள் பெரியோர்கள் மூலம் பலவிஷயங்களையுங் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம். ஆனால் நாம் கற்கவேண்டிய நூல்களோ கணக்கற்றன. அவைகளைக்கற்பதற்கோ காலமின்று. இடையில் நமக்குப்போதரும் பிணிகளோ எண்ணிறந்தன. அசந்தர்ப்பங்கள் பல. இன்னும் பலகாரணங்களாலும் நாம் புத்தகங்கள் மூலமாகவே எல்லாவற்றையுங் கற்றுத்தெரிந்துகொள்வோமென்றெண்ணுவது முடியாத காரியமாகும். ஆயினுங் கூடியவரையில் பெரியோர்களுதவியாலும் உதவியின்றியும் பல நூல்களையும் பார்க்கின்றோம், கற்கின்றோம். நாமாகப்பத்துப்புத்தகங்களை வாசிப்பதைப்பார்க்கிலும் பெரியோர்கள் மூலம் ஒரே ஒரு புத்தகத்தைப் பார்ப்பது மிக்க சிறியது. நாம் பல புத்தகங்களையும் வாசிப்பதால் நமது மனதில் ஒன்றேனுந்தங்க வழியில்லை. ஒரே ஒரு நூலை மாத்திரம் குன்றாத ஊக்கத்துடன் பெரியோர்கள் மூலம் கேட்டின் மிக்க பயனுடைத்தாகிறது. நாமாகக் கற்பதைப் பார்க்கிலும் பெரியோர்வாய்ச்சிறந்த நூல்களைக்கேட்பதே மிக்க பயனுடைத்து. கற்றலிற்கேட்டலே நன்று என்றார் பெரியர்.

நமது செவிகள் சதா பல நூற்களையுங் கேட்டுக்கொண்டே யிருக்கவேண்டும். நமது செவிகட்கு எப்போதும் பொருளுணவு கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். அதாவது எப்போதும் கற்றுணர்ந்த பெரியோர்கள் கூறும் நூற்பொருளைக்கேட்டல். நாம் பெரியோர்களிடம் பாடம் கேட்டாலுஞ்சரி, பிரசங்கம் கேட்டாலுஞ்சரி, சங்கீதங் கேட்டாலுஞ்சரி, அப்பொழுது நமக்கு நேரம் போவது தோற்றுவதும் பசியெடுப்பது தெரிவதுமில்லை; உடலின் வலி தெரிவதில்லை; காரணம் செவிக்குணவு கொடுக்கப்படுவதேயாம். "செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்" என்றார் நாயனார். இதனால் அறிவை வளர்க்கக் கேள்வியும் உடலை வளர்க்க உணவும் அவசியமன்றோ. நாம் பெரியோர்களிடம் பல விஷயங்களையுங் கேட்டு முடியுமுன்னரே சில விஷயங்களை மறப்பில் விடுத்து விடுகின்றோம். நாம் கேட்கும் விஷயங்களை மறவாமல் செவி வாயாகவும் நெஞ்சு களனாகவும் கேட்டவைகளை விடாமல் உளத்தமைத்துச் சிந்திக்கவேண்டும். நாம் ஒரே விஷயத்தை ஒரு தடவைக்கு இருதடவை கேட்டால் ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். அதையே மும்முறை கேட்டால் முறையறிந்துரைக்கலாம்.

நாம் தற்சமயம் ஒவ்வொர் வேலையை முன்னிட்டு உழன்று கொண்டிருப்பதால் நமக்குச் சதாகாலமும் பெரியோர்களிடம் பாடங்கேட்பதற்குத் தகுந்த சமயம் வாய்ப்பது அருமையாக இருக்கிறதென்பதை யெவர்தான் அறியார்? இக்குறையை நீக்கவே ஆங்காங்கு பல பெரியோர்கள் பல பத்திரிகை சஞ்சிகைகளையும் வெளியாக்கி நல் விஷயங்களைத் திரட்டி விடுக்கின்றார்கள். இதனால் நாம் அடையும் பலன் அனந்தமாகும். இம்முறையை யனுசரித்தே, தற்சமயம் "வித்யா போதினி" என்ற தமிழ்ச் செல்வியும் தோன்றி, நமக்குப்பல நல் விஷயங்களைத் திரட்டிக்கொணர்ந்து கொடுத்து நம்மை மகிழ்விக்க முற்பட்டுள்ளாள். நாம் அனைவரும் இவ்வித்யாபோதினி மூலம் பல பெரியோர்களும் சொல்லும் நுண்ணிய விஷயங்களைக் கேட்டுப்பயனுறுவோமாக.

மு. மாணிக்கம்,
உபாத்தியாயர்,
புதுவை.



௨

## நம் தாய்நாட்டின் க்ஷேமம்.

௧௨-ம் பக்கம் தொடர்ச்சி

எந்தத்தேசத்தாராயினும் எச்சாதியாராயினும் தம்மவர் க்ஷேமமேவிர்த்தியடையவேண்டும் என்று கருதும் சுயநலநாட்டம் உலகில் யாவர்க்குமே சுபாவமாதலால் அதைப்பற்றி விரிவாகக்கூறுவது வீணாகும். எப்படியோ நம் நாடு இத்தகைய க்ஷீணதசையடைந்த நிலைமைக்கு வந்து விட்டது இப்போது நாம் அக்குறையைவேனும் நமது பூர்வீக க்ஷேமத்தையடையவேண்டுமாயின்,

1-வது நம் நாட்டில் வர்த்தகம் அபிவிர்த்தியடையவேண்டும்.

2-வது வர்த்தகத்திற்கு இன்றியமையாத உதவியாகிய கைத்தொழில் விர்த்தியடையவேண்டும்.

3-வது மேற்கண்ட இரண்டிற்கும் ஆதாரமாகிய கல்வியபிவிர்த்தியடைய வேண்டியது அத்தியாவசியம்.

நம் நாட்டு வர்த்தகர்கள் தம்மவர்களுடைய கல்வியை மிக்க அலட்சியம் செய்கின்றனர். சாதாரணமாக அறுவு பேரேடு வைக்கவும் கடிதம் எழுதவும் தெரிந்தால் போதுமென்றும் கருதுகிறார்கள். கைத்தொழில் செய்வோரோ, அந்தோ! எழுத்தே தெரியாவிட்டாலும் அவசியமில்லையென்றும் கருதுகிறார்கள். சிறுவயதிலிருந்து தம் தந்தையின் கைத்தொழிலில் பழகிவிட்டால் போதும் என்று கருதுகிறார்கள்.

அந்தோ! இவர்களுடையவர்த்தகத்திற்கும் கைத்தொழிலுக்கும், கல்விகற்றுச்செய்யும் வர்த்தகம் கைத்தொழிலுக்கும் உள்ள அபாரமான தாரதம்மியத்தை இவர்கள் உணருகிறார்களில்லை. இந்த இருதரத்தாரும் கல்வி கற்றுத்தம் தொழில்களைச்செய்யத்தொடங்கினாலன்றி நம்நாடு கடைத்தேறாது.

ஜப்பான் தேசத்தார் வர்த்தகம் கைத்தொழில் இவற்றிற்கு அவசியமான சாத்திரங்களைக்கற்றுவரும்படி தங்கள் நாட்டுவாலிபர்களை இங்கிலாந்து, அமெரிக்கா, ஜர்மெனி முதலிய நாடுகளுக்கு அனுப்பி அவர்கள் யாவும் கற்றுவந்தபின், அச்சாத்திரங்களைத்தங்கள் பாஷையில்மொழிபெயர்த்துப்பாடசாலைகளை ஏற்படுத்தித்தங்கள் நாட்டாருக்குக்கற்பித்து அம்மார்க்கத்தால் வர்த்தகம், கைத்

தொழில் முதலியவற்றையும், கப்பல் கட்டுதல், எந்திரங்கள் நிருமாணித்தல் முதலிய யாவற்றையும் தங்கள் நாட்டில் அபரிமிதமாக விர்த்திசெய்தார்கள். மேல் நாட்டாருடைய ஆசார ஒழுக்கங்களில் தங்களுக்கு அனுகூலமானவைகளையெல்லாம் பின்பற்றத்தொடங்கினார்கள். இக்காரணங்களால் ஜப்பானியர் எல்லாவிஷயங்களிலும் மேல் நாட்டாருடைய நிறைமையையடைந்தார்கள். இதனால்தான் அவர்கள் ருஷியரை வென்று பிரக்கியாதிபெற்று மேல்நாட்டு இராஜாங்கத்தாரோடு சமமரியாதை பெற்றார்கள். அவர்கள் அவ்வாறு விருத்தியடைந்ததற்கு இராஜாங்கமே உதவியாகவிருந்தது என் முதற்காரணமாகவேயிருந்தது. ஆனால் நாம் அவ்வளவு செய்ய முடியாதென்பது தெரிந்த விஷயம். ஆயினும் நாமே சிரத்தையெடுத்துக்கொண்டு வர்த்தகத்திற்கும் கைத்தொழிலுக்கும் அவசியமான கல்வியை நம்மக்களுக்குக்கற்பிக்கலாம். ஒருவனுக்கு அன்னிய உதவியில்லாதபோது தன் முயற்சியாலேயேதான் முன்னுக்குவர முயல வேண்டியது அவசியமாகும்.

ஆகையால் நாமே வேறு உதவியை எதிர்பாராமல் இதைச்செய்யவேண்டும். வர்த்தகர்களும் கைத்தொழிலாளர்களும் இவ்விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு குடும்பத்தின் தலைவனும் இதைக்கவனித்து நடந்தால் பெரும்பயன் விளையும், நம் நாட்டில் எவ்வளவோ செல்வர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனேக புண்ணியவிஷயங்களில் பெருந்தொகைகளைச்செலவழிக்கிறார்கள், அச்செல்வத்தை நம்தாய் நாட்டின் க்ஷேமாபிவிர்த்திக்கு அவசியமான துறையில் செலவழிக்கிறார்களில்லை. என்னபயன்? இப்போது இந்த "வித்தியாபோதினி" என்னும் சஞ்சிகையைப்பிரசுரம் செய்யத்தொடங்கியிருக்கும் செய்கை நம்தாய் நாட்டின் க்ஷேமத்திற்கு எவ்வளவு அவசியமானதென்பதைப்பற்றி நாம் விவரித்துக்கூறவேண்டியதின்று. காலத்திற்குத்தக்க தருமத்தை ஆலோசித்துச்செய்வதே சிறப்புடைத்தாம். வர்த்தகத்திற்கும் கைத்தொழிலுக்கும் அவசியமான பாடசாலைகளை நம்நாட்டுச்செல்வந்தர்கள் ஆங்காங்குதாபிப்பதும், தக்க செல்வமுடையோர் தம்புத்திரர்கள் சாதாரணக்கல்வியைப்போதுமானமட்டில் கற்றபின் அவர்களை அன்னிய நாடுகளுக்கனுப்பி மேற்கண்ட விஷயங்களுக்கு அவசியமான சிற்பசாஸ்திரம் (Engineering) எந்திரசாத்திரம் (Mechanics) முதலியவற்றைக்கற்றுவரும்படி செய்வதும் மிக்க கஷ்டமான காரியமல்ல.

அன்னியதேசங்களுக்குச் சென்று அத்தகைய கல்விகளைக்கற்கும்போது தற் றவற்றையனுபவமாக அறிய அந்த அவர்களுக்கு வேண்டிய அனுகூலங் களை, இதுவல்லாமல், அந்த நாட்டு வர்த்தக அளவையும் முறைகளையும்



பிரத்தியட்சமாகக்காணும்போது, பலர் ஒன்று சேர்ந்து பெருந்தொகையை முதல்வைத்து பிரபல வர்த்தகம்செய்யும் வழிகளையறிவதோடு தைரியமாக அவ்வாறு செய்ய உற்சாகமுடையவராவார்கள். இன்னும் தங்கள் சொந்த புத்தியில் சமயோசிதப்படி ஒரு புதுத்துறையில் பிரவேசித்து வேலை செய்யக்கூடிய மதிநுட்பத்தையும் பெறுவார்கள்.

அந்தோ! இப்போதோ நம்நாட்டார், கொஞ்சம் புத்தி சூக்ஷ்மமுடைய ஒருவன் ஒருவிதப்புதுவிதமானவழியில் ஒன்றைச்செய்ய முயன்றால், மற்றப்பேரும் அதைக்கண்டதும் அவ்வழியே தாங்களும் செய்யமுயன்று அவனுக்குப் போட்டியாய் வேலை செய்து, அவன் அவ்வழியில் ஒழுங்காகவும் சத்தியமாகவும் நடந்தால், இவர்கள் சூதாகவும் அயோக்கியமாகவும் நடந்து அவனையும் கெடுத்துத் தாங்களும் கெடுவார்களேயன்றி, அவன் ஒருவழியைக்கண்டுபிடித்து முன்னுக்கு வருவதாயின், அதைக்கண்டு தாங்கள் இன்னொரு துறையில் பிரவேசித்து அவனைப்போல் க்ஷேமமடையக்கருதமாட்டார்கள். இந்த இழிவான நடக்கைக்குக்காரணம்; வேறு வழியில் பிரவேசித்து வேலை செய்ய இவர்கட்குப் போதுமான அறிவில்லாமையே அதாவது கல்வியின்மையே.

4-வது கல்வி:— வர்த்தகம் கைத்தொழில் இவற்றில் பிரக்யாதியடையக் கல்வி அவசியம் வேண்டுமென்று முன்னமே உரைத்தோம். ஒரு தேசம் க்ஷேமமடையவேண்டுமாயின் கல்வியே இன்றியமையாத சாதனமாகும். கல்வியில்லாத எச்சாதியாரும் எந்நாட்டாரும் க்ஷேமமடையமாட்டார்கள், அடைந்ததுமில்லை. சாதாரணக்கல்வி புத்தியைக்கூர்மையடையச்செய்து மேலே விருத்தியடையும்படி மனதைத்தூண்டவல்லது.

கல்வியென்றால் ஒரு தேசத்தில் ஒரு சிலர் பி, ஏ, பி, எல், எம், ஏ, எம், எல், பட்டங்கள் பெற்று விடுவதால் தேசமே கல்வி பெற்றதாக ஆகாது. பாமரஜனங்கள் சாதாரணக்கல்வியேனும் கற்றுத்தங்கள் நாட்டிற்குரிய முக்கிய விஷயங்களையேனும் அறிந்திருக்கவேண்டும். அவர்கள் தங்கள் நாட்டின் நிலைமை, குறைந்தகுறைவுகளை, தங்கள் தாய் நாட்டின் அபிவிருத்திக்கு இடையூறுயாவை முற்றுக்குறைகள் இன்னவையென்றும், தம் தாய்நாட்டின் க்ஷேமத்திற்கு வேண்டியவை இன்னவையென்றும் உணர்ந்து விவசாயிக்கத்தக்க கல்வியைப்பெறவேண்டும். பாமர ஜனங்கள் கல்விபெறும்வரையில் ஒரு நாடு கல்வியுடைய நாடாகாது.

கல்வி கற்கும் மக்கள் கேவலமாகிய சேவா விருத்தியையே கௌரவத் தொழிலெனமதிக்கும் புத்தியை விட்டொழித்து சுயாதீனமாகிய வர்த்தகம் கைத்தொழில் முதலியவற்றையே கௌரவத்தொழிலெனமதித்து, கல்வி கற்கவேண்டும். பெற்றோர்கள் ஆரம்பத்திலேயே தம்மக்களுக்கு இத்தகைய புத்தியைப்புகட்டிவைக்கவேண்டும்.

கொஞ்சக்காலம் நம்நாட்டார் இந்த விஷயங்களில் ஊக்கம்வைத்து உழைப்பார்களாயின், கடவுள் அருளால் நம் நாடு முன்னுக்குவரும் என்பதில் ஐயமில்லை ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரர் அருள் புரிவாராக.

'ஆலவாயடிமை'

---

ஓம்

தத்சத்

நமனுள் அசையும் நாதனே துணை

## மனம்

சாதுக்களே சற்றுக்கவனியுங்கள் ?

இவ் ஆழி (கடல்) சூழ்ந்த நில உலகில் கண் நாம் பிறந்து இத்தனை வயதாயும் நம்முட் குடிகொண்டிருக்கிற மனத்தை இப்பேர்ப்பட்டதென அறியாமல் வீண்காலத்தைப்போக்கி வருகின்றோமல்லவா? ஆகையின் இன்று "மனம்" என்றதனுள்ளபடியான விஷயத்தை எடுத்து விவரிக்கிறோம். ஊக்கமுடன் வாசித்து உணருங்கள் "மனம்" ரூபமற்றது, இம்மனமானது குரங்கைப்போன்றும், பட்டி நாயைப்போன்றும், கட்டுக்கடங்காக்குதிரையைப்போன்றும், அலைந்து திரிவது. இம்மனதின் வலிமையை எவ்வகைத்தானதென்று நாம் சொல்லத்திறமில்லோம். அது மிகவும் அபார சக்தியுடையது. ஒரு குரங்கிற்கு இயற்கையாகவே பைத்தியம் பிடித்திருந்தது, அக்குரங்கு ஒரு நாள் மதுவை அருந்திவிட்டது, மதுவைக்குடித்துத் தன்னிலைமை தனக்கே தெரியாமற் சுற்றித்திரியும் தருவாயில், பூனைக்காஞ்சொறிப்புதரில் விழுந்து விட்டது. அதற்கு



ளத்தில் ஒருந்தேளும் கொட்டிவிட்டது, இந்த குரங்கின் நிலை எவ்விதமிருந்திருக்குமோ அவ்விதநிலைமையுடைய மனதின் செய்கைகளைக் கீழ்ச் சற்று விரித்துரைப்பாம்.

(1) மனோராஜ்யம்:—வீடு வாசல்களையும், கூடகோபுரங்களையும், கோயில் குளங்களையும், தோட்டம் துரவுகளையும், நிமிஷநேரத்தில் நிர்மாணிப்பதும், அழிப்பதும்.

(2) மனோபாவனை:—தான் பார்த்திராத, பம்பாயிலோ, கல்கத்தாவிலோ, பூனாவிலோ, மதுரையிலோ, உள்ள வீடுவாசல்களையோ மனிதர்களையோ, மிருகங்களையோ, தான் நேரில் கண்டதுபோல், விநாடிக்குள் நினைப்பதும் அழிப்பதும்.

(3) மனோ வியாபாரம்:—இந்தியா ஐரோப்பாவைப்போன்றிருக்குமா? அமெரிக்காவிற்கும், ஆப்ரிக்காவிற்கும் சில வித்தியாசங்களுண்டு, சென்னையும், திருச்சியும் ஒரே வகைப்போன்றிருக்கிறதென்று ஒன்றிலிருந்து ஒன்றை மாற்றுவதும், புறப்படுவதும், ஒப்பிடுவதும்.

(4) மனோத்கியம்:—கண்ணால் பார்த்தும் காதால் கேட்டுமிராத ஓர் ரூபத்தை உற்பத்தி செய்வதும், அதின் அழகைக் கவனிப்பதும், ஆனந்திப்பதும், சுவைப்பதும்.

(5) மனோரதியம்:—புசித்தோ, குடித்தோ இராத, போதை வஸ்துவையோ, சங்கீதத்தையோ, கேட்பதுபோலும், பருகுவதுபோலும், சிருஷ்டிப்பது.

(6) மனோ சலனம்:—கண்ணால் பார்த்துக்கொண்டே இருக்கும்போது, பூமியோ, மரமோ, ஜலமோ, மலையோ, தானிருக்கும் ஸ்தானமோ, அசைவது போல் கற்பிப்பது.

(7) மனோசன்:—தான் கண்டு களித்த நாடகத்தையோ, ஒரு பெண்ணையோ, தாசியையோ அப்போது நேரில் பார்ப்பது போலும், பேசுவதுபோலும், சந்தோஷமடைவதுபோலுமிருப்பது.

(8) மனோற்சாகம்:—மனைவி மக்கள் மாண்டு போயிருந்தாலும், தன்னிடமிருந்த ஆஸ்தி அழிந்தாலும், சோற்றிற்கு இல்லாமல் திண்டாடினாலும், கடன்காரன் ஜெயிலுக்குப்பிடித்தாலும், துக்கமின்றி சந்தோஷிப்பது.

(9) மனோராஜி:—கொலை களவுக்கோ, லாப நஷ்டத்திற்கோ நன்மை தீமைக்கோ மனம்போக்கு வருவது.

(10) மனோதீரம்:—எத்தனையோ கேடழிவு வந்தாலும், துர்ப்பகை வெட்டுப்பகை வந்தாலும், துக்கத்தின் மீது துக்கம், இடிமேல் இடிவந்தாலும், தைரியத்துடனிருப்பது.

(11) மனோரதம்:—கலெக்டர் ஆகவேண்டும், தாசில்தாராக வேண்டும், கவர்னராகவேண்டும், ராஜாவாகவேண்டும், ராஜாமகளை மணக்கவேண்டும், ராஜப்பிரதிநிதி தன் பேச்சைக் கேட்கவேண்டும், பிரதிநிதி என்ற பட்டம் கிடைக்கவேண்டும், எல்லோரும் தனக்கு ஊழியக்காரராயிருக்கவேண்டும், என்று நினைப்பது.

(12) மனோசாத்தியம்:—எட்டாத பொருளுக்குக்கொட்டாவி இடுவது. (திராட்சைப்பழமும் நரியும், என்ற கதையை உபமானமாக எடுத்துக்கொள்ளவும்) ஆகாயத்தில் பறக்கவேண்டும், தேவனாகவேண்டும், வள்ளலாய் இருக்கவேண்டுமென்று நினைப்பது.

(13) மனோபவம்:—மனதினால் நிர்மாணித்த ஓர் கற்பனையை உண்மையாக நினைத்து திரும்பத்திரும்பக்கற்பனைகளையே உற்பத்திக்க முற்படுவது.

(14) மனோலம்:—தான் பார்த்து அனுபவித்த பெண்ஜாதியையோ, பிள்ளையையோ, சிநேகிதனையோ, நேசியையோ, அவலக்ஷண ரூபமாக நினைப்பது; அதாவது ஆங்கில பாஷை கற்று ஆங்கிலர்களைப்போல நடையுடை பாவனையில்லாத நம்மைச்சில சகோதரர்கள் தூஷிப்பது.



(15) மனோரமம்:—குஷ்டரோகியையோ, துர்நாற்றமுள்ளவளையோ, அவலக்ஷணமுள்ள கண், காது, மூக்கு இல்லாதவளையோ, ரதியாக நினைத்துச்சுகமனுபவிப்பதும், ஆடு, மாடு, கழுதைகளை, மனித ஜன்மமாக நினைத்து இன்பமனுபவிப்பதும், இந்துக்கள் சகலத்திலும் நாகரிகமாக இருந்தும், இந்துக்களைத்தூஷித்த அநாகரிகர்களுடைய கொள்கையைப் பின்பற்றுவதும்.

(16) மனோபீஷ்டம்:—இனிப்புள்ள வஸ்துக்களின் மீது வெறுப்பும், வேப்பெண்ணெய் எட்டிக்காய் முதலான கசப்புள்ள பதார்த்தங்களின் மீது விருப்பும் கொள்ளுவது, அதாவது, இந்துக்களுக்குரிய அன்னபானாதிகளின் மீது வெறுப்பும், இவர்களுக்குத் தகுதியல்லாத, கள், சாராயம், ஒஸ்கி, ஜின், காபி, டீ, முதலிய பதார்த்தங்களின் மீதும், ரொட்டி, பிஸ்கட், மாம்சம், முதலிய பதார்த்தங்களின் மீதும், அபிமானமுங்கொள்ளுவது.

இன்னும்வரும்.

கரூர்—பாலகிருஷ்ணப்பரதேசி.

உ

செந்திலாண்டவன்திருவடி துணை.

## வித்தைகள்.

௰-ம் பக்கத்தொடர்ச்சி.

இவர்கள் கிருஷ்ணயஜுர்வேதிகள் போதாயனம், சத்தியாஷாடம், ஆபஸ்தம்பம், ஆகினிவேசியம், பாரத்துவாஜம், வைகானஸம் என்னும் ஆறு சூத்திரங்களை அநுஷ்டிக்கின்றார்கள். சுக்லயஜுர்வேதிகள் காத்தியாயனம், மாத்தியந்தனம், என்னும் இரண்டு சூத்திரங்களையனுஷ்டிக்கின்றார்கள். சாமவேதிகளுக்குத்திராஹியாயனம், ஜைமினீயம் என்னுமிரண்டும் பயன்படுகின்றன. ருக்குவேதிகள் ஆசுவலாயனம் ஒன்றையே அனுஷ்டிக்கிறார்கள். சத்தியாஷாடம் இரண்யகேசியம் என்பன ஒன்றேயாம். சத்தியாஷாடருக்கு ஹிரண்யகேசியர் என்று ஓர் பேருண்டாதலாலென்க. இச்சூத்திரங்கள் கர்மப்பிரயோகமுறைகளையே கூறும்.

இவைகளெல்லாம் சாகாபேதங்களையனுசரித்து எழுந்தவைகளாம். ஸ்மிருதிகளினால்தத்தம் வருணாச்சிரமங்களுக்கு ஏற்ற கருமங்களையறிந்து, அவற்றில் வழுக்கள்நேரிடுமாயின் அவற்றை நிவிர்த்திப்பதற்குரிய பிராயச்சித்த விதிகளையுமுணர்ந்துகொண்டு விதிவழுவாது ஒழுகுபவரே வைதிகரென்னப்படுவார்.

நிற்க வேதவிதிப்படி நடக்கவியலாதவர்களுக்குச்சர்வேசுவரன் ஆகமம் என்று ஓர் வித்தையை அனுக்கிரகித்திருக்கிறார். சிவபெருமானால் காமிகம் முதல் வாதுளம் இறுதியாக இருபத்தெட்டாகமங்களும் இன்னுஞ்சிலவும் கூறப்பட்டுள்ளன. சக்தியையே பிரதானமாகக்கொண்டு எழுந்த ஆகமங்களுமுள. அவை சாக்தேயாம் என்னப்படும். கணபதியையும் சுப்பிரமண்யரையும் பரம்பொருளாகக்கூறும் ஆகமங்களுமுள. அவைமுறையே காணபாத்தியம் கௌமாரம் என்னப்படும். மஹாவிஷ்ணுவிற்குக் கூறப்பட்ட ஆகமமுண்டு. அது பாஞ்சராத்திரம் என்று பெயர் பெறும். இவைதாம் பரம்பொருளாகக்கொண்ட தெய்வத்தை மகிமைப்படுத்தி அத்தெய்வங்களை யாராதிக்கும் முறையை விரிப்பனவாம். ஆதலாலிவை அவ்வம்மதஸ்தருக்குப்பிரமாணமாவதேயன்றி யாவர்க்கும் பொதுவிற்பிரமாணமாவதில்லை. ஆதலாலிவற்றையவ்வம்மதஸ்தர் சிறப்புநூலென்று கூறிக்கொண்டாடுவார்.

அன்றி, அகஸ்தியர், உபமன்யு, ருரு, ததீசியாகிய இந்நான்கு மஹரிஷிகளாலெழுந்தநான்குசிவாகமங்களுள. இவை போதாயனர் ஆபஸ்தம்பராதி முனிவர்கள் கற்பநூலிற்கூறிய சிவபூஜா விதியை விரித்துக்கூறுவன. அதுபற்றி இவை வைதிக ஆகமங்கள் என்று வைதிகர்களாற் கொண்டாடப்படுகின்றன. முற்கூறிய காமிகாதிகள் சுதந்திராகமங்கள் என்னப்படும். ஆகமங்களுக்குச்சித்தாந்தமென்றும் ஓர் பேருண்டு. ஆதலால் ஆகமானுஷ்டானமுடையவர்களைச் சித்தாந்திகளென்று கூறுவதுமுண்டு. இவையெல்லாம் ஈசன் அருளினாலுண்டானவைகளாதலால் முடிவுப்பொருளில் ஒன்றாகவே நிற்கும். ஆயினும் அவ்வாறு கொள்ளாமல் வைதிகரும் சித்தாந்தி



களும் ஒருவரையொருவர் விரோதித்துப்பெருவழக்கிடுவாராயினர். திருமூலர் வேதாகமங்களிரண்டுமோரே பொருளில் முடிவனவாதலாலிரண்டுக்கும் அபேதம்பாராட்டி அவ்விரு வகை ஞானங்களையுமொத்துச்சமரச ஞானமென்பதாவழக்குத்தீர்த்துள்ளார். குமாரதேவரென்ற மஹானுபாவர் வேதாகமங்களிரண்டும் சிவபெருமானாலுண்டாக்கப்பட்டனவென்றும், இவ்விரண்டும் தனித்தனியேமோட்சத்துக்கு மார்க்கங்களாகும் என்றும் கூறியருளினார். தாயுமானவரும் திருமூலரருளிச்செய்த சமரசஞானத்தையே யங்கீகரித்துப்பலவிடங்களில் விதந்து கூறினர்.

இனிவேதத்துக்கு அனுசரணையாக ஆயுர்வேதம் என்று ஒரு வேதம் கேட்கப்படுகின்றது. இது அதர்வணவேதத்தில் ஓர் பாகம், இதினின்றும் பிரமதேவர் வைத்தியத்தைப்பிரித்தெடுத்து, அதற்கு ஆயுர்வேதமென்று பேரிட்டுத்தட்சப்பிரஜாபதிக்குபதேசித்தார். அவர் அசுவினிதேவர்களுக்குபதேசித்தார். அசுவினிதேவர்களிடமிருந்து இந்திரன் கற்றுக்கொண்டான். இந்திரன் மூலமாய்த்தன்வந்திரி பெற்றார். தன்வந்திரி ஆத்திரேயருக்குக்கூறினார். ஆத்திரேயர் பரத்துவாஜருக்குச்சொன்னார். பரத்துவாஜர் சரகருக்குச்சொன்னார். விசுவாமித்திரருடைய புத்திரரான சுஸ்ருதரும் தன்வந்திரி மூலமாயுபதேசம் பெற்றார். இவற்றுக்கு மூலமாகிய ஆயுர்வேதம் இப்பொழுது காணப்படுவதில்லை. சில கிரந்தங்களில் மேற்கோளாகக்காட்டப்பட்ட சில வாக்கியங்களை ஆயுர்வேதமென்று ஒன்றிருந்ததென்று காட்டுகின்றன. சரகர் இயற்றிய சரகமும், சுஸ்ருதரியற்றிய சுஸ்ருதமுமே இப்பொழுது மூலப்பிரமாணங்களாகக்கொள்ளப்படுகின்றன. சரகம் முந்தியது. சுஸ்ருதம் அதற்குப்பிந்தியது. இவற்றின் விரிவெல்லாம் இனிவெளியாகவிருக்கும் இந்து வைத்தியம் என்னும் நூலில் விளங்கும். இது பிரத்தியட்சப்பிரமாணமாக எல்லாராலும் கொள்ளப்படுமாதலால் மஹா சிலாக்கியமுடையதாம்.

யோகம் என்று ஒரு பெருநூலுண்டு. யோகமென்பது சம்மந்தப்படுதல் என்றுபொருள்தரும். சிலர் ஜீவாத்மாவும்பரமாத்மாவும்

ஒன்று கூடுதலே யோகமென்றும், சிலர் மனம் பிரமப்பொருளோடு கூடுதலே யோகமென்றும் கூறுவர். எவ்வாறாயினும் ஜீவப்பிரமவைக்கியத்தைக் கூறுதலே யோகமாம். இந்நூலும் பிரத்தியட்சப்பிரமாணமாம். இவற்றின் விரிவு ஹடயோக தீபிகை முதலிய கிரந்தங்களில் விளங்கும்.

அறுபத்துநாலு கலைஞானங்களென்றும் நூல்கள் கூறுகின்றன. அவை அக்ஷரலக்ஷணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிடம், தருமசாத்திரம், சகுனசாத்திரம், சிற்பம், வைத்தியம், வடிவசாஸ்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாஷணம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அஸ்திரபரீட்சை, சொர்ணபரீட்சை, இரதபரீட்சை, கஜபரீட்சை, அசுவபரீட்சை, இரத்தினபரீட்சை, பூமிபரீட்சை, சங்கிராம இலட்சணம், மல்யுத்தம், ஆகருஷணம், உச்சாடனம், வித்வேஷணம், ஸ்தம்பனம், மோகனம், வசீகரம், மதனசாஸ்திரம், காந்தர்வவாதம், பைரிவவாதம், கௌத்துகவாதம், தாதுவாதம், காருடம், நஷ்டம், முஷ்டி, சிந்தனை, ஆகாயப்பிரவேசம், பரகாயப்பிரவேசம், ஆகாயகமனம், அதிரிசியம், இந்திரஜாலம், மகேந்திரஜாலம், அக்கினிஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம், வாயுஸ்தம்பனம், கண்கட்டு, வாகஸ்தம்பனம், சுக்கிலஸ்தம்பனம், கன்னஸ்தம்பனம், கட்கஸ்தம்பனம், அவஸ்தப்பிரயோகம் என்பனவாம். முற்கூறியவற்றில் பல நூல்கள் இவற்றுள் கலந்திருப்பதால் எல்லாவற்றையும் சேர்த்தே அறுபத்துநாலு கலைஞானங்களெனத்திரட்டப்பட்டனவென்று கொள்ளலாம். இவற்றைச்சுபாநுபவத்தாற்கண்டு தெளியலாமாதலால் இவைகளும் பிரமாண நூல்களாயின. இவையெல்லாம் பரம்பொருளை விளக்கிக்காட்டி முத்திநெறிகூட்டும் நூல்கள் எனப் பின்னாலும் விதந்து கூறுகின்றன. இவைகளே வித்தியாஸ்தானங்களாம்.

(வரும்.)

சிவானந்தநாதர யோகீஸ்வரர்



## சிறுவர் ஒழுக்க விளக்கக் கதைகள்.

---

### செல்வமும்—தருமமும்.

(கூசம் பக்கம் தொடர்ச்சி.)

உமேசன்:—ஆர், அப்பா! உண்மைதான். பிச்சைக்காரர்களுக்குப்பிச்சை கொடுக்கும்பொழுது ஆறுதல் மொழிபேசியே கொடுத்துவருகின்ற தாங்கள் இவனுக்குக்கொடுக்கும்பொழுது மட்டும் ஒன்றும் சொல்லாமலே கொடுத்தீர்களே! அது என்ன?

ரசல்:—அருமைக்குழந்தாய்! இப்பிச்சைக்காரனுக்கு அத்தகைய ஆறுதல் மொழி தேவையா என்பதை நான் சொல்வதைக்கேட்டபின்னர் யோசித்துக் கூறு. இப்பிச்சைக்காரன்பெயர் லோ என்பது, இவன் ஓர் சணல்நூற்புடைவை வியாபாரி. இவ்வியாபாரத்தில் இவனுக்குச்சிறந்த இலாபமில்லாமலிருந்தாலும், இவன் கடைக்கு வந்த எந்தப்பிச்சைக்காரனும் வெறுங்கையோடு செல்லான். இந்த வியாபாரத்தை இவன் செய்துவந்ததில் அடைந்த பெருமகிழ்ச்சியெல்லாம் பிச்சைக்காரன் தன்கடைக்கு வந்தால் வெறுங்கையுடன் போகவிடாது அவனுக்கு ஏதாவது கொடுத்தனுப்புவதிலேயே அமைந்திருந்தது. ஆனால் இம்மகிழ்ச்சியும் நீண்ட நாளைக்கு நிலைக்கக்கூடாததாயிற்று. இவன் வேறு தொழில் செய்து பிழைக்க முற்படலானான். நகரத்தில் சில முக்கிய வியாபாரிகள் ஒன்றுகூடித்தங்களுக்கு வரப்போகின்ற சரக்குகளிலிருந்து கிடைக்கப்பெறும் இலாபத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்தான். இவர்களைக்கண்டதும், ஆ! இவர்கள் எவ்வளவு களிப்புற்றிருக்கிறார்கள் என்று பெருமூச்செறிந்து, நானும் பணக்காரனாயிருந்தால், ஆ! வேண்டாம் தெய்வம் இருக்கிறது. என் நலத்துக்காகமட்டும் செல்வனாயிருந்து பயனென்ன? என் செல்வத்தில் ஏழைகளும் பங்கு பெறவேண்டுமே' என்றனன். இவ்வித ஆசை நிரம்பிய எண்ணத்துடையவன் தனது சுருங்கிய வியாபார இலாபத்தைக்கொண்டு எவ்விதம் இப்பெரிய எண்ணங்களை நிறைவேற்றக்கூடும்? இவனுடைய சம்பாத்தியமெல்லாம் நிதானமும் செட்டும்கொண்ட ஒருவருடைய வாழ்க்கைக்கே போதுமானது. 'என்னுடைய வாழ்நாளுக்குத்தகுந்த இவ்வித வாழ்க்கைக்கு ஏற்ற இவ்வித சம்பாத்தியமே போதுமானது. இப்பொழுது

தூ வாழ்க்கைக்கு மேற்பட்ட வாழ்க்கைவேண்டாம்' என்று சொல்லிக்கொண்டே தன் வீடு நோக்கிச் செல்வானானான். செல்லும் வழியில் லாட்டரிச்சீட்டுப்போட விருப்பமுள்ளவர்கள் சீட்டுப்பெற்றுக்கொள்ளலாமென்னும் விபரங்கண்ட அறிக்கைத்துண்டு ஒன்று இவன் கையில் கொடுக்கப்பட்டது. இவ்வறிக்கையைப்பார்த்ததும், அதிர்ஷ்டமிருந்து ஒருவேளை அதிகத்தொகைகிடைக்குமென்ற ஆசையால், பேராசை பெருந்துன்பம், என்னும் நீதியையும்மறந்து, லாட்டரி ஆபீசுக்குப்போய்த்தன்கையிலிருந்த முழு ஆஸ்தி 42ரூபாயையும் செலுத்திச்சீட்டுவாங்கிக்கொண்டான். சீட்டுக்குலுக்கெடுக்கும் நாள்வரை பெருங்கவலையில் ஆழ்ந்திருந்தான். சில சமயம் தனது சேமநிதியாகக்காணப்பட்ட ரூ 42யும் கொடுத்து லாட்டரிச்சீட்டுவாங்கிவிட்டோமே' நம்துரதிர்ஷ்டம் காரணமாக எல்லாம் தோற்றுப்போய்விட்டால் என்ன செய்வதென்று இரங்குவானாயினான். மற்றொரு சமயம் லாட்டரியில் தனக்குப் பைபையாகப்பணம் கிடைத்துவிடுமென்று யோசனைபண்ணினான். கடைசியாக லாட்டரிச்சீட்டு எடுக்கப்படும் நாளும் நெருங்கியது.

உரைஞ்:—நல்லது, அப்பா! இவனுக்கு ஏதாவது இலாபம் கிடைத்ததா?

ரசல்:—ஆம், 50000 ரூபாய்கள் கிடைத்தன.

உரைஞ்:— அப்படியா! ஆநந்தத்தால் இவன் அந்தரமாகக் குதிப்பனே!

ரசல்:— இவன் உடனே லாட்டரி ஆபீசுக்குப் போய்த் தனக்குள்ள பணத்தைப் பெற்றுக்கொண்டது முதல் சில தினங்கள் செய்வதின்னதென்று தெரியாமலும் திகைத்திருந்தான். பின்னர் இப்பணத்தை வீணாகக் குவித்து அழகு பார்ப்பதிலும் ஏதாவது ஒரு நல்லதொழிலுக்குப் பயன் படுத்தலாமென்று கருதினான். அங்ஙனமே தனது பழையகடையைப்பெருக்கிப் புதுச்சரக்குகளை வரவழைத்து வியாபாரஞ் செய்ய முற்பட்டு, தனது சுறுசுறுப்பாலும் வியாபார சாதுரியத்தாலும் முதலுக்கு முதல் இலாபம் அடையக் கூடியவனாயினான். இலட்சாதிபதியாகிய இவன் ஒரு பத்து வருஷத்துள் நகரத்திலுள்ள சீமான்களுள் ஒருவனானான். இவ்வளவு செல்வந்தனான காலத்தும், தனது பொருளிலும் ஏழைகளும் பங்குபெற வேண்டுமென்று



முன் கொண்ட விரதத்தைக் காப்பாற்றி வந்தனன். புதுப்பணம் படைத்தோமென்று தருக்குற்றழியும் தனவந்தரைப்போலன்றி இவன் ஏழை எளியவரைக் கண்டதும் தன் பண்டைய எளிய நிலைமையை நினைந்து அவர்களோடு கலந்து அளவளாவி மகிழ வெறுப்பற்றவனானான், இங்ஙனம் ஒருகுமளவும் இவனுடைய செல்வம் பெருகிக் கொண்டே வந்தது. ஆனால் செல்வந்தருடைய கூட்டுறவையே நாடி நெருங்கி வந்த காலத்தில் அவர்களைப்போல் தானும் டாம்பீகச் செலவு செய்யக் கருதினான். இக்கருத்துக்கிணங்க நாட்டுப்புறத்து விசித்திரவிஸ்தாரமாளிகையொன்றையுந் தோட்டங்களையும் வாங்கி அவற்றில் வேடிக்கை விநோதங்களுடன்காலங்கழிக்கலானான். யோசனையின்றியே அதிகச் செலவைக் கொடுக்கும்பொருள்களில் விருப்புடையவனாய் அவற்றைப் பெற முயலவே தனது செல்வம்தேய்ந்து வரக்கண்டான். தன் செல்வத்துக்குக் காரணமான வியாபாரத் தொழிலையும் இஷ்டப்பட்ட வேளையில் ஏனோ தானோ வென்றே பார்த்து வரலானான். நாளடைவில் இப்பழக்கமே முதிர்ந்து விஷயத்தில் ஆழ்ந்து வீண்பெருமை கொண்டுநின்றதால
ன் பெருமிதச் செலவைக் குறைக்க முடியவில்லை. 'எனக்குவேண்டிய செல
'கள்வேன் மற்றவர்கள் தங்களுக்கு வேண்டிய
கொள்ளட்டும்' என்றஎண்ணத்தால் நெஞ்சுநிண
யவர்களுக்கு அவனிடமிருந்து யாதொன்றும்
ாயிற்று. தன்னைச்சூழ்ந்து எளியவர்கள் அடித்
போல் முழக்குங் குரலைக்கேட்டான். அதி
லிருந்து வந்த சிநேகிதர்கள் தங்களை மேலும்
கேட்டு வந்தனர். அவர்கள்வேண்டுகோளுக்கு
சாகத்தான் பணம் தேடி வைத்திருக்கிறே
மெய் வருந்தி யுழைத்துப் பிழைக்கக்
ட்டான். நாளடைவில் தன்னுடைய
பிற்றுக்கானபோஷணைப்பொருளுதவி
ம் இவன் வசித்துவரும் வீட்டின் ஓர்
ளாயும் கழிப்பதாகக் கெஞ்சிக் கேட்

டதையும் இரக்கமில்லாது மறந்து விட்டனன். தாயார் தரித்திரத்தால் வருந்திச்சாவதைக்கண்டும் மனமிரங்காதவனானான். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், தந்தை தாய்ப்பேண்' என்னும் நீதிமொழிகளை மதியாத இவன் தாயைப்பேணாமையாகிய பெருங்குற்றத்தின் பலனை விரைவில் அடையலானான். இவனுடைய டாம்பீகச்செலவு இவனைச்சீக்கிரத்தில் ஓட்டாண்டியாக்கிவிட்டது. தன்னைப் பேணத்தக்க திறமையும் அற்றவனானான். சுருங்கச்சொல்லுமிடத்து, இப்பொழுது நீ பார்க்கிற முறையில் வீடு வீடாய்ச்சென்று பிச்சையெடுத்துண்ணும் பெரும்பாக்கியமுடையவனாயிருக்கின்றான். இவன் அடைந்திருக்கும் இத்தாழ் நிலைமை கௌரவமான பிறப்புடையவர்களுக்கு வெறுப்பையும் நிந்தனையையும் மூட்டுவதாம்.

உலைசன்:— அப்பா! அப்பா! அதிர்ஷ்ட வசச்செல்வமானது ஒருவனைத் துன்மார்க்கனாக்குகின்ற தன்மையினால் நான் இப்பொழுது இருக்கின்ற நிலைமையிலேயே இருக்கவிரும்புகின்றேன்.

ரசல்:— என்னருமை உலைசனே! உனது
அதனையே விரும்புகின்றேன். தெய்வாநுகூல
யின், உன்னுடைய பெருந்தன்மையையும் தய
தே, இப்பொழுது நான் கூறிய விருத்தாந்தத்
பத்திற்கு இரங்காவிடின் இன்பமில்லை
ஒழித்து ஆற்றுவது தனவந்தர் கடமை
பத்திலும் கடமையைச்செய்வதனாலாகும்
கடவாய்.

இங்ஙனம் பேசி முடிந்தபொழுது சூ
க்கொண்டு அஸ்தமிக்கும் சமயமாயிருந்
தின் மீது அஸ்தமனகாலக்கிரணங்கள்
மாகக்காற்றும் ஏற்பட்ட அச்சோலையி
தங்கள் அகநோக்கித்திரும்பினார்கள்.



## மகா கவி ரவீந்திரநாத தக்கோர்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"—குறள்.

வங்காளத்தில் பழமை சான்ற குடும்பங்களில் ஒன்று நமது தக்கோர் (தாகூர்) குடும்பம். இக்குடும்பம் சக்கரவர்த்திகளாலும் மன்னர்களாலும் மதிக்கப்பெற்ற பெருமையது. இத்தகைய குடும்பத்தில் மகரிஷி தேவேந்திர நாத தக்கோருக்கு 1861-ம் ஆண்டு பிறந்தவர், நமது மகாகவி ரவீந்திரநாத தக்கோர். மாட்சி மிக்க விக்டோரியா மகாராணியார் ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்து சென்றிருந்தபொழுது, நமது சக்கரவர்த்தினியாரால் மிகவும் விமரிசையாகவும் அன்பாகவும் வரவேற்கப்பட்டனர். மகரிஷியின் மூத்த குமாராகிய துவிஜேந்திரநாததக்கோர் சாந்தமும் அருளும் ததும்பிய தத்துவ ஞானி. இவர் நிஷ்டையிலிருந்தாலும் பிரவிர்த்தியின்றியிருந்தாலும் அப்பொழுது அணில்களும் அழகிய பறவைகளும் இவருடைய தொடைமீதும் தோள்மீதும் பயமின்றி யேறிக்குதித்து விளையாடிக் களிப்படையும். மகரிஷியின் இரண்டாவது குமாரர்தான் இந்தியன் சிவில் சேர்விசில் நுழைந்த முதல் இந்தியர். நமது கவிராயரின் மைத்துனர்களான ககனேந்திர நாத தக்கோர், அவனீந்திர நாததக்கோர் ஆகியஇருவரும் ஓவியத்துறை தேர்ந்தவர்கள். நமது கவிராயரின் சகோதரிகளில் ஒருத்தி பாரதி என்னும் பத்திரிகையாசிரியராகச் சிறந்தவர். நமது புலவரின் தந்தையாரிடம் விளங்கிய தூய தன்மையும் தெய்வத்தியானமும் மகனிடத்[illegible] நீதிக்கிணங்கக்கவிராயரிடம் அமைந்திருப்பவை அவர் பாடியபாடல்களில் தெற்றென விளக்கமாகின்றன. ஒருவாறு அப்பாடல்களுக்கு ஓர்வித அழகையும் கொடுத்துள்ளன. மகரிஷியின் தியான நிலையும் ஏகாந்த வாசமும் கடவுள் வழிபாடும் நமது புலவரை இளமை முதல் பள்ளிக்கூடப்படிப்பை விரும்பாமல் செய்ததன்றி இயல ...ர விஷயங்களை ஏகாந்தத்தில் தனித்து ஆராய்ந்து கொள்ளும் பயிற்சி ...ம் பழக்கின. இவர் தம் வாழ்நாளில் ஒரு பொழுதும் பள்ளிக்

கூடம் போய்ப் படித்தவரல்லர். ஆயினும் அறிவினும் ஒழுக்கத்தி னும் ஆத்ம விசாரணையினும் ஒப்பற்ற பெருமை யுடையவராயினர்.

இவருடைய இளம்பிராயக் கவிகள் விசேஷ ஆதரவைப் பெற வில்லை. ஆகவே இங்கிலாந்துசென்று சட்டக்கல்வியின் றுறைப்போ னவர் அங்கும் அப்படிப்பு தம் வாழ்நாளுக்கு உற்ற துணையாகமா ட்டாதெனக்கருதி, தம் தாய்நாட்டை நோக்கித்திரும்பினர். பின்னர் எழுதியபலவகைக்கவிகளே இவருடையபெயரை உலகத்தார் உணர் ந்து மகிழும்படி செய்தவை. இவர் இளமையிலேயே விசித்திரக் கவிகள் இயற்றும் வன்மை பெற்றவராகக்காணப்பட்டனர். இவரு டைய முப்பத்தைந்தாவது வயதில் ஓர் துக்ககரமானசம்பவம் நேரி ட்டது. இதன் பின் இவருடைய கவிகள் முற்றிலும் மதவிஷயமாக வும் தத்துவவிளக்கமாகவுமே விளங்கின. இவர் பல நாவல்கள், நாட கங்கள் தத்துவநூல்கள் எழுதியுள்ளார். இவருடைய தெய்விக அநுபவமும் தேசாபிமானமும் இவரால் போல்பூரில் நடத்தப்பட்டு வருகின்ற சாந்திநிகேதன் என்னும் கலாசாலையினால் விளக்கமா கும். இவருடைய கவிகளை வாசிக்கிறவர்கள் இவருடைய கவித்து வத்தையும் நுட்பமதியையும் உணரக்கூடும்.

போல்பூர் மைதானத்தில் நடத்தப்பெறும் சாந்தவீடு என்னும் கல்லூரியில் சுமார் இருநூறுமாணவர்கள் தாகூர்ப் புலவரால் பயிற் றுவிக்கப்பட்ட போதகாசிரியர்களால் கற்பிக்கப்பட்டுவருகின்றார் கள். போல்பூர் கல்கத்தாவிலிருந்து தொண்ணூற்று மூன்று மைல் தூரத்திலுள்ளது. கலாசாலை இருக்குமிடம் முன்னர் பரந்த வெற்றி டமாகஇருந்தது மகரிஷி இதைத்தமக்கு ஏற்றதியானஸ்தலம் ஆகு மாறு மரஞ்செடிகள் உண்டு பண்ணித்தவச்சாலையாக்கினர்.

இப்பள்ளிக்கூடம் இப்பொழுது தனிச்சர்வகலாசாலையாகுந் தன்மையில் சிறந்து விளங்குகிறது. கவிராயர் இளமையில் தாம் படித்துவந்த படிப்பு தம்முடைய மனதுக்குச்சந்துஷ்டியை விளை யாததால், அப்பள்ளிக்கூடத்துக்குப் போகாமலிருப்பதற் கே த்தாம் தரித்திருந்த செருப்பைத் தண்ணீரிலூறவைத்து .



ப்பிட்டுவிட்டிருக்கவும் முயன்றனர் என்று சொல்லப்படுகி றது. இத்தகையார் நம் தேசத்து மக்களுக்குத் தனிக் கல்வி எவ்வி தம் புகட்டப்படுதல் அவசியமென்பதைத்தெரிந்து, அங்ஙனம் போ திக்கவே, குருகுலாச்சிரமமாகிய சாந்திநிகேதனை ஸ்தாபிக்கலானர்.

நமது கவிராயர் சமீபத்தில் வங்க பாஷையில் இயற்றியகவிகள் இங்கிலீஷில் சிறந்த வசனநூலாக மொழிபெயர்க்கப்பட்டபொழுது இங்கிலிஷ் சாகித்யச்சிறப்புக்காக 1913 வருடம் அளிக்கப்பட்ட நோபெல் பிரைஸைப்பெறுவனவாயின. ஆங்கிலபாஷையில் மொ ழிபெயர்த்துப் பதிப்பிக்கப்பட்டிருக்கும்நூல்கள், கீதாஞ்சலி, கார் டினர் (தோட்டக்காரன்) இளஞ்சந்திரன் (Crescent Moon) இரு ட்டறைப்ரசன் (The Key of the Dark Chamber) தபால் ஆபீ ஸ் (Post Office), சித்ரா (Chitra), சாதனை (Sadhana) கபீர் கவி கள் ஒருநூறு; பழம் பொறுக்கல், பசிக்கல்கள் முதலியன. கவிராய ரின் சுயவுந ஜீவியசரிதம் 1916 ஹு ஜநுவரியீ முதல் கல்கத்தா மாடர்ன் ரிவியூ பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இன் னும் எண்ணிறந்த கவிகள், வியாசங்கள், கதைகள்முதலியவும்மொ ழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பெற்றுள்ளன. நமது கவிராயருக்கு நோபெல் வெகுமதி கிடைத்திருப்பதானது இந்திய மொழிகளும் மற்றைய நாட்டுச்சிறியமொழிகளின் அந்தஸ்தைப்பெற்றிருப்பவை யென்பதையும், இந்தியமொழியில் அற்புதசக்திகள் அமைந்துள்ளன வென்பதையும் நிரூபிப்பதாகின்றது. இந்த வெகுமதி பாஷா சாகி த்யத்தில் ஒப்பற்ற புலமை வாய்ந்தவர்களுக்குத்தான் கொடுக்கப்ப டுவது. இங்கிலாந்தில் பிரசங்க சிங்கமாகத்திகழ்ந்த நமது கவிரா யரால் பலசிறந்த பிரசங்கங்கள் செய்யப்பட்டுள்ளன. தம்புலமைக் காகக்கிடைத்த வெகுமதித்தொகை 8000 பவுனையும், தன்னயமின் மையும், தேசாபிமான உயர்குணமுந்தோன்ற போல்பூர் கலாசாலைக் கே கொடுத்துவிட்டனர். 1913ல் 'சாகித்யப்புலவர்' என்னும் பட் டம் கல்கத்தா சர்வகலாசாலையாரால் உதவப்பட்டது. பின்னர் 'சர்' என்னும் பட்டத்தை அரசாங்கத்தாரால் கௌரவிக்கப்பட்டனர். தென் ஆபி ரிக்கவில் துன்பு இந்திய வீரர்களை உற்சாகப்படுத்துமாறு சம்ஸ்கிரு

நக்கவிபொன்றை இவருடையதொண்டை மேற்கொண்டொழுகும் ரெவரெண்டு C. F. ஆண்டிரூஸ்மூலம் அனுப்பிவைத்ததும், கன்னடா நாட்டார் இந்தியரை பிரிட்டிஷ் ஏகாதிபத்யக்குடியென்று சமத்துவங்காட்ட மறுத்தமையை முன்னிட்டு அவர்கள் நாட்டில் சென்று உபந்யாசம்புரிய மறுத்தமையும், மற்றும் இவர் தேசாபிமானம் விளங்கச்செய்துள்ள பாடல்களும் நூல்களும், இவருடைய தூயதன்மை, தேசாபிமானம், தன்னயமின்மை, தெய்வீகஞானத்தை எளியவர்களுக்கும் எடுத்துரைக்கும் வன்மை முதலியவற்றைத்தெற்றென விளக்குவனவாம்.

'சேக்கிழாரடியான்.'

---

ஸ்ரீ நான் னூலருங்கவித்தொகை.

## அருணாசல புராணம்

### திருக்கண் புதைத்த சருக்கம்

௯௨ ஊடுவர் புலவிதீர்ப்பர் ஒருவருக் கொருவர் மாலை
சூடுவர் மறைநூல் கேட்பர் சொல்லுவர் வீணை நாதம்
பாடுவர் பலவினோதம் பயிற்றுவர் பலகாற் சூதம்
ஆடுவர் வெல்வர் தோற்பர் அணிகலம் புனைவர் அன்பால்.

௯௩ அந்தமே லொருநாள் அன்னை ஐயனை இறைஞ்சி ஐயா!
இந்துவும் இரவிதானும் யாவரென் றிசைத்தாள் எந்தை
சுந்தரக் கனிவாய் மின்னே! சுடர்கள் எம் இரு கண் என்றார்
அந்தமைப் பயந்தாள் ஈசன் விழிகளைப் புதைத்தாள் கையால்.

௯௪ பார்புதைத்த திருவயிற்றான் பணிந்துரைப்பான் நெடுஞ்சூலப் படையாய்! (காலன்
மார்புதைத்த மலர்ப்பதத்தாய்! ஆர்புதைத்த சடாடவியாய்! வையம் [ஏழும்
கார்புதைத்த இருளாக விழிபுதைத்த கொடும்பாவம் கழலுமாறு
நீர்புதைத்த பாரிடத்தில் தவம்புரிதற் கானஇடம் நிகழ்த்தும் என்றான்.

௯௫ தாவரத்தை அதிரவைக்கு மணிதனையுள் அறிவழிக்கும் தடங்கண்மாதர்
நூபுரத்தம் புயசரணம் சிவப்பேற இழைமருங்குல் நுடங்கவறு
மாபுரத்தின் மணிமேடை அரம்பையர்க்கு விளையாட மலைகளாகும்
கோபுரத்தின் நெடுங்கொடிகள் காமவல்லிகளாங் கொடிக்குத் கொழு [கொம்பாகும்



ப்படுவதாயின், மற்றிருவகைப்படிப்பையும் கற்றுக்கொள்ளலாம். நம் நாட்டில் பண்டைக்காலம் சிறந்தோங்கிய பள்ளிக்கூடங்களில் படிப்பு நல்லமுறையிற் கற்பிக்கப்பட்டுவந்தது. இக்காலத்தும் அத்தகைய பள்ளிக்கூடங்கள் போற் சில காணப்படினும் அவற்றின் ஆசிரியர்கள் அக்காலத்திய ஆசிரியர் தேர்ச்சியை முற்றும் பெற்றவராயில்லை. 'இளமையிற்கல்' என்னும் முதுமொழிக் கிணங்கக்கற்கப்புகும் இளைஞருக்குக் கற்பிப்பனவற்றைத் தகுதியுடையவர்களைக்கொண்டு கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பெறின் அக்காலத்தான் எழுதப்படிக்கக் கற்றறிந்தவர்களின் தொகையும் அதிகப்படுவதற்கும். (தொடரும்)

பத்திராசிரியர்

---

## துளசி அல்லது பிருந்தை.

வருடந்தோறும் நமது பெண்மணிகள் துளசி நோன்பை அனுஷ்டிப்பதை நாம் காண்கிறோம். ஆனால் இது யாருக்காகவென்பதையும் எதற்கு அனுஷ்டிக்கவேண்டுமென்பதையும் பலர் அறியாதிருக்கின்றனர் என்பது உண்மை. காரணத்தைத்தெரிந்து அதைச்செய்தால் விசேஷமாயிருக்குமென்பதைக்கொண்டு, இன்று இதன்விருத்தாந்தம் நமது பெண்மணிகளுக்கு எடுத்துக் கூறப்படுகிறது.

முன்னொரு காலத்தில் பார்வதிதேவி அகோரமான தவம் செய்துகொண்டிருந்தாள். அப்பொழுது சாட்சாத் பரமசிவமே மாறுவடிவமாய் அத்தபோவனத்தைக் காவல் புரிந்தார். இந்திரன் பார்வதி தேவிக்குச் செலுத்தவேண்டிய தனது கடமையைச்செலுத்த அவ்விடம் வந்தனன். வனத்திற்குள் நுழையுங்கால் பரமசிவன் உள்ளே யாரும் செல்லக்கூடாது என்று தடுத்தார். ஆனால் இந்திரன் தான்போய்த்தான் தீரவேண்டுமென்று வம்புபண்ண அவரும் முடியாதென்றே மறுத்தார். காவல் புரிபவர் யாரென்றுணராது இந்திரன் தான் பிடித்தபிடியையே பிடிக்க பரமசிவன் கோபங்கொ

...றிக்கண்ணைத் திறந்தார். திறக்கவே நாற்றிசையிலும் நெருப்புப்பொறிவீச ஆரம்பித்தது. இதோ இனிநாம் வெந்து நீறாய்ப் போவோம் என்றஞ்சி இந்திரன், ஈசனே! உன் சரணே அடைக்கலம் புக்கனன் என்று பாதத்தில் விழுந்தான். பிறகு சிவனார் கோபந்தணித்துக்கொண்டு, நெருப்புப்பொறியையெல்லாம் கங்கையிலெறிந்துவிட்டார். அவையெல்லாம் தண்ணீரில் விழவும் ஒன்றாய்த்திரண்டு ஒரு குழந்தை வடிவமாய்த் தோன்றியது. கங்காதேவி சடுதியாய் அவ்விடம் வந்து வீறிட்டு அழும் குழந்தையைக் கையிலேந்தி சிவனார் கந்த குமாரன் தனக்கும் மகனாதலால் அதற்குப்பால் கொடுத்து, போஷித்தாள். இக்குழந்தையே பின்னால் ஜலந்தரன் என்னும் பெயரோடு விளங்கினான் என்ப.

ஜலந்தரன் இராக்ஷஸ கணமாதலால் எவரையும் மதியாது தான்றோன்றியாயிருந்தான். ஓர்கால் இவனைப்பார்க்க பிரும்மா வர அவரை இகழ்ச்சியாகப்பேசிக்கோபமூட்டிவிட்டான். ஆகையால் அவரும் கோபங்கொண்டு மஹாவிஷ்ணுவிடத்தில் போய் நடந்ததையெல்லாம் சொன்னார். பிறகு மகாவிஷ்ணுவே வந்தார். அவரையும் அவமதித்துப்பேச இருவருக்கும் சண்டை உண்டாயிற்று. இந்தச் சண்டையில் மகாவிஷ்ணு ஜலந்தரனை வென்று ஓட்டிவிட்டார்.

அவ்வாறு ஓடிப்போனவன் வேறு ராக்ஷஸக் கூட்டத்தவர்களோடு கூடி ஓர் இராஜ்யம் ஸ்தாபித்துக்கொண்டான். இப்படியிருக்கையில் ஒருசமயம் பிருந்தையென்னும் அழகுள்ள ஒரு பெண்மணி இவன் கண்முன்பட்டாள். இவள் அடுத்த நாட்டு அரசன் புதல்வி யென்பதை விசாரித்தறிந்து, இவளை எப்படியாவது கலியாணம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று இச்சை கொண்டான். இவனுடைய எண்ணப்படியே பெண்ணின் தந்தையும் இசைந்ததால் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. பின் மணப்பந்தலில் ஜலந்தரனுக்குப் பிருந்தை மாலையிடுஞ்சமயம் துரதிர்ஷ்டவசமாய் அவனுடைய கிரீடம் கீழே விழுந்துவிட்டது; மாலையும் அறுந்து துண்டாய்க் கழன்று விழுந்தது. இதனால் ஜலந்தரனுக்குப் பிரியமற்றுப்போய்விட்டது.



## குறிப்புகள்

மதுரைத்தமிழ்ச்சங்கம்:—ஸ்ரீமான். பொ. பாண்டித்துரைத் தேவரவர்களால் 1901௵ மேமீ 24உ. மதுரையில் நான்காந்தமிழ்ச் சங்கமாக நிறுவப்பெற்றுள்ள இச்சங்கத்தின் 20வது ஆண்டு நிறைவு விழா, [illegible] மீ 17, 18, தேதிகளில், சேதுபதி கல்விச்சாலையில், சென்னை நிர்வாக சபை மெம்பரும், சர்வகலா சாலை உபதலைவருமான ஸ்ரீமான் K. ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. பல புலவர்களின் பிரசங்கங்களும் நடைபெற்றன.

செப்டம்பர் மீ 27 உ:—இந்தியாவிலும் பிறநாட்டிலும் தெய்வக் கொள்கை என்னும் அறிவைப்பரப்பிவரும் பிரமசமாஜத்தின் ஸ்தாபகரும், பலமொழிப்புலவரும் உடன்கட்டையேறும் வழக்கத்தை பிரிட்டிஷ் அரசாங்க உதவிகொண்டொழித்தவரும், உண்மைநெறியை உலகிற்பரப்பிவருபவரும் ஆகிய ஸ்ரீ ராஜா ராம்மோகனராயின் குருபூஜைத்தினம் நாளிது செப்டம்பர் மீ 27 உ பிரமசமாஜத்தாரால் சிறப்பாக வந்தனை வழிபாடுகளுடன் கொண்டாடப்பட்டுள்ளது.

ஸர் தாமஸ் ஹாலண்டு:—இந்திய இராஜப்பிரதிநிதிச்சட்டசபையின் மெம்பரான ஸர் தாமஸ் ஹாலண்டு கே. சி. எஸ். ஐ. கே. சி. ஐ. இ, அவர்கள் தமது வேலையை இராஜிநாமா செய்துவிட்டனர். இதனை ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்களும் அங்கீகரித்துவிட்டனர்.

மிஸஸ் ரமாபாய் ரானடே:—இவர் பம்பாய்ச்சட்ட சபையில் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இம்மாதரசின் உதவியால் சமுதாயசீர்திருத்தங்களை நடத்திவருகின்ற இந்திய சேவக சங்கத்தார் தம் பத்திரிகையில் பார்க்கெட் இராகின்ஸ் என்னும் சீமாட்டியாரெழுதிய பாராட்டுரையைப் பிரசுரித்துக் கௌரவித்துள்ளார்.

மிஸ் பிரமிளா சௌதரி பி.எ.—சில்ஹெட் ஸ்ரீ ராஜசந்திர சௌதரி அவர்களின் குமாரத்தியாரும், பஞ்சாப் பி. டி. பட்டதாரியுமான மிஸ் பிரமிளா சௌதரி பி. எ. அவர்களுக்கு ரசாயனப்பயிற்சிப்பட்டம் பெறுமாறு ஏதாவது இந்திய நாகரிகத்தார் பொருளுதவிபுரிந்துவருகின்றார். இக்கன்னி லண்டன் ராஜ கல்லூரியில் ரசாயனப்பயிற்சி பெற்றுவருகின்றார்.

மிஸ் சுநந்தபோஸ் எம்.ஏ.—ஸ்ரீ ஜகதீசசந்திரபோஸ் அவர்களின் குமாரத்தி மிஸ் சுநந்தபோஸ் எம்.ஏ. லேடி சர்வகலாசாலையில் பாஸாகிய போதனாமுறைத் தேர்ச்சிப்பட்டமும் பெற்றிருப்பது மகிழ்தற்க்கது.

பிரிட்டிஷ்இண்டஸ்ட்ரி:—இப்பெயருடன் அழைக்கப் பெறுக்கும் புதுமாதிரியான கப்பல், பிரிட்டிஷ்கைத்தொழிற் பொருள் முதலியவற்றை ஏற்றிக்கொண்டு ஓர் காட்சிசாலைபோல் தெ. அமரிக்கா, தென்னாப்பிரிக்கா, அவுஸ்டிரேலியா, நியூஸிலண்டு, ஜப்பான், சீனம், ஸ்டிரேயிட்செட்டில்மென்ட்ஸ் இந்தியா முதலிய இடங்களுக்குப் போய்ச்சுற்றித்திரும்ப நிகழும் 1923 வருடம் வேனிற்காலமத்தியில் தேம்ஸ் நதியினின்றும் புறப்படுமெனப்படுகிறது. சுமார் 43000 மைல் தொலையும் பதினெட்டு மாதங்களில்சுற்றிவருமாம்.

நாவிகத்தொழில்:— நமது மாகாணத்துரைத்தனத்தார், கப்பலோட்டும் தொழிலின் பிரதமப் படிப்பைக்கற்றுக்கொடுப்பதற்காக மசூலிப்பட்டணத்தில் நாவிகத் தொழிற்பள்ளிக்கூடம் ஒன்றைப் பரீட்சார்த்தமாக ஆறுமாத காலத்துக்கு நடத்துவதற்கான ஏற்பாடுகளைச்செய்யும்படியாக மாகாணத்துறைமுக உத்தியோகஸ்தரைக் கேட்டிருக்கிறார்கள்.

இந்தோ ஜப்பான் வர்த்தகம்:— இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் மத்தியில் வியாபாரத்தை விர்த்திசெய்யும் நோக்கத்துடன் ஒஸாகாவிலுள்ள வர்த்தகக்காட்சியாளர் சுற்றுப்பிரயாணிகள் சிலரை இந்தியாவுக்கு அனுப்பக்கருதியிருக்கிறார்கள். இப்பிரயாணிகள் பம்பாய், காராச்சி டெல்லி, ஆக்ரா, சிம்லா, கல்கத்தா, டார்ஜிலிங், சென்னை ரங்கூன், பினங், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குப் போய் வியாபாரிகளைச்சந்தித்துத் தங்கள்நாட்டுத்தொழில்களை விருத்திபண்ண வழிதேடுவார்களாம்.

பிரிட்டிஷ் கைத்தொழிற் காட்சி:— இக்காட்சி நிகழும் 1922ம் வருடம் பிப்ரவரி 27உ லண்டனில் திறக்கப்படுகிறது. இந்தியத் தொழிற்பொருள்களும் அனுப்பிவைக்கப்படலாமென்றும், அங்ஙனம் அனுப்ப விரும்புவோர், கைத்தொழில் டைரக்டருக்கு விபரங்கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்றும், இந்தியத்துரைத்தன அறிக்கை ஒன்று அறிவிக்கின்றது.

223246

ஓம்

## வித்யாபோதினியின்
# ஜீவிய சந்தாதாரர்கள்.

ஸ்ரீமான் K. V. ராமாச்சாரியார் அவர்கள் B. A. M. L. C.,
சென்னை சட்ட நிரூபணசபை அங்கத்தினர்,
மதுரை.

,, M. C. ஸீதாராம் அய்யர் B. A. B. Sc. (மான் சென்டர்)
லேடி ஸ்ரீ இந்திராவர மஹாநாட்டின் அக்ராசனாதிபதி,
மதராஸ்.

,, P. K. இராமஸ்வாமி அய்யர் அவர்கள்,
ஸௌராஷ்ட்ர ஸபை காரியதரிசி முனிசிபல் கௌன்ஸில்
மெம்பர், மதுரை ஸௌராஷ்ட்ர உத்தியோகக் கமிட்டி
மெம்பர், மதுரை.

,, V. S. இராமய்யர் & ஸன்ஸ் அவர்கள்,
இராஜகோபாலய்யர், ஸௌராஷ்ட்ர ஸ்ரீராம் மில்ஸ்,
மானேஜிங் டைரெக்டர், மதுரை.

,, N. K. இராமஸ்வாமி அய்யர் அவர்கள்,
இந்தியா ஜரிகை மில்ஸ் மானேஜிங் டைரெக்டர்,
மதுரை, மதராஸ்.

,, பு. அ. பாலுசாமி அய்யர் & ஸன் அவர்கள்,
வியாபாரிகள்,
மதுரை.

,, காம. இராயலய்யர்,
நாகஸ்வாமி அய்யர் கம்பெனி, வியாபாரிகள்,
மதுரை, மதராஸ்.

,, கா. ம. க. சதாசிவய்யர், கிருஷ்ணய்யர் கம்பெனி,
கிருஷ்ணய்யர் உடையார் நிறை செய்தவர் வியாபாரிகள்,
மதுரை, மதராஸ்.

ஸ்ரீமான் ஜே. யன். கிருஷ்ணசாமி அய்யர்
கலர்ஸ் & கெமிகல்ஸ்.
மதுரை.

,, R. B. வெங்கிடசாமி அய்யர் & சன்ஸ்
லெட்சுமிநரசிம்ஹவிலாஸ்
நகைத்தொழிற்சாலை,
சுப்புராமாச்சாரியார் அவர்கள், பம்பாய் ஜெயலெட்சுமி
பவான் ரெஸ்டாரெண்ட் மானேஜிங் டைரெக்டர்
மதுரை.

,, ஜே. வி. ரெங்காச்சாரியார் அவர்கள் (உபநிஷத்)
உபாத்தியாயர்
ஸௌராஷ்ட்ர பிராஹ்மண வேதாத்யயன பாடசாலை
மதுரை.

,, திருக்கொண்டா மு. ராமச்செந்திரய்யர் அவர்கள்,
மதுரை.

,, நா. வெ. நாராயணசாமி அய்யர் அவர்கள்,
ரத்ன நகைத்தொழிற்சாலை,
மதுரை.

---

,, அ. க. கோவிந்தராஜலய்யர் அவர்கள்
ஜரிகை சாயநூல் ஜவுளி வியாபாரம்,
மதுரை ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம்.

,, புளியடி. ஜெ. செங்கய்யர் அவர்கள்,
நூல் வியாபாரம்,
மதுரை.

---